# வேலூர் மண்டலம்
## ஆம்பூர் நகராட்சி
## அம்மாஉணவகம்

**1) நகராட்சி பொது விபரம்**

ஆம்பூர் நகராட்சி வேலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள தேர்வுநிலை நகராட்சியாகும். இந்நகராட்சியின் மக்கள் தொகை 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 115252 ஆகும். மேலும் இந்நகராட்சி 36 வார்டுகளை உள்ளடக்கியுள்ளது.

**2) திட்டத்தின் அவசியம்**

இந்நகரில் உள்ள மக்களின் பிரதான தொழில் தோல் பதனிடும் தொழில் ஆகும். மேலும் நகராட்சிப் பகுதியின் அருகில் உள்ள கிராமங்களில் இருந்து தினசரி ஏராளமான மக்கள் கூலி வேலைக்கும், தினக்கூலி பணிகளுக்கும் வந்து செல்கின்றனர். தினசரி உணவிற்காக சம்பளத்தில் பெரும்பகுதியை செலவிடுகின்றனர். எனவே வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பொதுமக்களின் நலனுக்காக இத்திட்டத்தினை செயல்படுத்த வேண்டியது அவசியமாகும்.

**3) அமைவிடம்**

இந்நகரின் புதிய பேருந்து நிலைய வளாத்தில் இடத்தில் வார்டு– டி , பிளாக்– 24 , சர்வே எண்.129ல் 160.60 ச.மீ பரப்பளவில் அனைத்து வசதிகளும் உள்ளடக்கிய அம்மா உணவகம் அமைத்திட தீர்மானிக்கப்பட்டது.

**4) திட்டப்பிரேரணை**

நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி நாள்6.6.2014 மற்றும் இந்நகர்மன்ற தீர்மான எண். 130 நாள் 27.6.2014 –ன்படி ரூ.25.00 லட்சம் மதிப்பீட்டில் அம்மா உணவகம் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி வழஙகி உத்தரவிடப்பட்டது.

**5) நிதி ஆதாரம்**

ஆம்பூர் நகராட்சியில் அம்மா உணவகம் அமைத்திட 2014–15ம் ஆண்டு அரசு மான்யம் ரூ.25.00 இலட்சத்தில் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது.

**6) உள்கட்டமைப்பு வசதிகள்**

அம்மா உணவகம் சுமார் 160.60ச.மீட்டர் பரப்பளவில் அனைத்து வசதிகளை உள்ளடக்கி செய்து முடிக்கப்பட்டுள்ளது. அவற்றில் கீழ்கண்டவாறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1) டோக்கன் வழஙகும் இடம்
2) உணவு வழஙகும் இடம்
3) உணவு அருந்தும் இடம்
4) சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்
5) மின் வசதி
6) நவீன வசதிகளுடன் கூடிய சமையல் கூடம்
7) இருப்பறை
8) பாத்திரம் சுத்தம் செய்யும் இடம்
9) பணியாளர் கழிப்பறை

மேலும் சமையல் செய்ய தேவையான பாத்திரஙகள் மற்றும் இதர உபகரணஙகள் பெறப்பட்டு அம்மா உணவகம் செயல்பட தயார்நிலையில் உள்ளது.

**7) திட்டத்தின் பயன்கள்**

திட்ட செயலாக்கம் மூலமாக, நகராட்சி பகுதியில் உள்ள ஏழை மக்கள் அனைவருக்கும் குறைந்த செலவில் தரமான உணவுகள் கிடைத்திட வழிவகை செய்யப்படும்.

ஆணையாளர்
ஆம்பூர் நகராட்சி,

# வேலூர் மண்டலம்
# ஆம்பூர் நகராட்சி
# திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்

- ஆம்பூர் நகராட்சி 2008 ஆம் ஆண்டு முதல் தேர்வு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது.
- இதன் மொத்த பரப்பளவு 17.97 சதுர கி.மீ ஆகும்.
- 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 113856 ஆகும்.
- மொத்த வார்டுகளின் எண்ணிக்கை36.
- தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 45 மெட்ரிக் டன் ஆகும்.
- முதல் நிலை குப்பை சேகரிக்கும் பணிக்கு 50 டிரை சைக்கிள்கள் மூலம் தினசரி வீடு வீடாக சென்று குப்பைகள் சேகரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்கு தனியார் மூலம் 120 துப்புரவு பணியாளர்களைக் கொண்டு சேகரிக்கப்படுகிறது.
- இரண்டாம் நிலை சேகரத்திற்கு டிப்பர் லாரிகள் – 2 எண்ணிக்கை, டம்பர் பிளேசர் – 3 எண்ணிக்கை, மினி ஆட்டோ வாகனம் – 2 எண்ணிக்கை, ஜே.சி.பி.வாகனம் – 1 எண்ணிக்கை, ஆகியவை பயன்பாட்டில் உள்ளது. இந்த வாகனங்களின் மூலம் உரத்திடலுக்கு குப்பைகள் கொண்டு செல்லப்படுகிறது.
- மொத்த துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 133 . இதில் 93 துப்புரவு பணியாளர்கள் பணிபுரிகின்றனர். 40 துப்புரவு பணியிடங்கள் தற்போது காலியாக உள்ளன.
- தற்போது பயன்பாட்டில் உள்ள மக்கு உரத்திடலின் பரப்பளவு 3.17 ஏக்கர் நிலம் பெத்லகேம் பகுதியிலும், 8.77 ஏக்கர் நிலம் தார்வழிப் பகுதியிலும் அமைந்துள்ளது.
- தார்வழி பகுதியில் அமைந்துள்ள உரத்திடலில் மக்கும் உரத்திடல், குப்பைகளை பிரிப்பதற்கான கட்டடம், காவலர் தங்கும் அறை, சுற்றுச்சுவர் மற்றும் சாலை வசதி ஆகியவை செய்யப்பட்டு உள்ளது.

ஆணையாளர்
ஆம்பூர் நகராட்சி,

## வேலூர் மண்டலம்

## ஆம்பூர் நகராட்சி

## பாதாளச் சாக்கடைதிட்டம்

- ஆம்பூர் நகராட்சியில் பாதாளச் சாக்கடை திட்டம் செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை ரூ. 67.00 கோடி மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமை அலுவலகம், சென்னை–5க்கு அனுப்பப்பட்டுள்ளது. அரசு அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

ஆணையாளர்
ஆம்பூர் நகராட்சி,

# வேலூர் மண்டலம்

# ஆம்பூர் நகராட்சி

## புதிய பேருந்து நிலைய நிலைப்பாடு

- **ஆம்பூர் நகராட்சி 2008ம் ஆண்டிலிருந்து தேர்வு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது.**
- **இதன் மொத்த பரப்பளவு 17.97 சதுர கி.மீ ஆகும்.**
- **2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 113856 ஆகும்.**
- **மொத்த வார்டுகளின் எண்ணிக்கை 36.**
- **தற்போது இயங்கி வரும் ஆம்பூர் பேருந்து நிலையம் 91 செண்ட் இடம் போதுமானதாக இல்லை. பேருந்து நிலையத்தினை ஒட்டி அமைந்துள்ள வருவாய் துறைக்கு சம்மந்தமான 91 செண்ட் இடம் நகராட்சி மூலம் நில உரிமை மாற்றம் கோரி வருவாய் துறைக்கு 09.01.2012ல் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. தேசிய நெடுஞ்சாலை துறையினர் மூலம் ஆறு வழிபாதையாக மாற்றம் செய்த பின்னர் பேரூந்து நிலையம் விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்படும்.**

ஆணையாளர்
ஆம்பூர் நகராட்சி,

<u>**வேலூர் மண்டலம்**</u>

<u>**ஆம்பூர் நகராட்சி**</u>

<u>**தெருமின் விளக்குகள்**</u>

- ஆம்பூர் நகராட்சி தேர்வுநிலை நகராட்சியாகும். இதன் மொத்த பரப்பளவு 17.97 ச.கி.மீ. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை **113856** ஆகும். இந்நகராட்சி 36 வார்டுகளை உள்ளடக்கியது.
- ஆம்பூர் நகராட்சியில் மொத்தம் 2827 தெரு மின் விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. (குழல் விளக்குகள் – 2116, சோடியம் ஆவி விளக்குகள் – 499, மின் சிக்கன விளக்குகள் – 180, உயர் மின் கோபுர விளக்குகள் – 32 )
- இந்நகராட்சியில் உள்ள தெரு மின்விளக்குகள் அனைத்தும் சரியான முறையில் தினந்தோறும் பராமரிக்கப்பட்டு முழுமையான முறையில் எரிவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆணையாளர்
ஆம்பூர் நகராட்சி,

## வேலூர் மண்டலம்

## ஆம்பூர் நகராட்சி

## சாலைகள்

- ஆம்பூர் நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாகும்.
- இதன் மொத்த பரப்பளவு 17.97 சதுர கி.மீ.
- 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 113856 ஆகும்.
- இந்நகராட்சி 36 வார்டுகளை உள்ளடக்கியது.
- ஆம்பூர் நகராட்சி சாலைகளின் மொத்த நீளம் 108.600 கி.மீ. இதில் தார்சாலைகள் – 41.402 கி.மீ., சிமெண்ட் சாலைகள் – 64.938 கி.மீ., மண்சாலைகள் – 2.260 கி.மீ .அடங்கும்.

ஆணையாளர்,
ஆம்பூர் நகராட்சி.

# வேலூர் மண்டலம்

# ஆம்பூர் நகராட்சி

## குடிநீர் வசதி நிலை

வேலூர் மாவட்டம், ஆம்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆம்பூர் நகராட்சி ஓர் தேர்வுநிலை நகராட்சி ஆகும்.

நகராட்சியின் மொத்த பரப்பளவு 17.97 சதுர கி.மீ. நகராட்சியின் மொத்த மக்கள் தொகை 113856 . மொத்த வார்டுகளின் எண்ணிக்கை 36. நகராட்சியின் மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை 25036. நகராட்சியின் மொத்த குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை 8600.

நகராட்சியில் குடிநீர் விநியோகம் 2002 ஆம் ஆண்டு வரை பாலாற்று படுகையில் உள்ள பச்சகுப்பம் நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. நகர்புறம் மற்றும் சுற்றுப்புறங்களில் இருக்கும் தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் பாலாற்று படுகை மாசுபட்டது. இதனால் பச்சகுப்பம் நீரேற்று நிலைய குடிநீர் மாசு அடைந்து நீரேற்று நிலையம் செயல்பாட்டில் இருந்து நிறுத்தப்பட்டு விட்டது. இதற்கு மாறாக ஆம்பூர் நகரத்திலிருந்து பேர்ணாம்பட்டு சாலையில் 14 கி.மீ. தொலைவில் சாரங்கல் மற்றும் நரியம்பட்டு ஆகிய இடங்களில் புதியதாக நீரேற்று நிலையம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் அமைக்கப்பட்டு நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டு இயங்கி வருகிறது.

➢ நகராட்சியின் மொத்த குடிநீர் தேவையின் அளவு 10.50 எம்எல்டி ஆகும். ஆம்பூர் நகர மக்களின் முழு குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய வேலூர் கூட்டு குடிநீர் திட்டம் மூலம் வேலூர் மாநகராட்சி, 11 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 944 ஊரக குடியிருப்பு பகுதிகளுக்கு கூட்டு குடிநீர் வழஙக அரசாணை எண்.319 நாள்.31.12.2010ல் ரூ.1295.00 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழஙகப்பட்டது. இந் நகரில் மேற்படி திட்டம் முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

➢ ஆம்பூர் நகராட்சி மக்களின் முழு குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லாததால், நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதம் வழங்கும் வண்ணம், வேலூர் மாநகராட்சி, 11 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 944 ஊரக குடியிருப்பு பகுதிகளுக்கு கூட்டு குடிநீர் திட்டம் அரசாணை எண்.319 நாள்.31.12.2010ல் ரூ.1295.00 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழஙகப்பட்டது.

➢ ஆம்பூர் நகராட்சி மக்களின் முழு குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லாததால், நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதம் வழங்கும் வண்ணம், வேலூர் மாநகராட்சி, 11 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 944 ஊரக குடியிருப்பு பகுதிகளுக்கு கூட்டு குடிநீர் திட்டம் அரசாணை எண்.319 நாள்.31.12.2010ல் ரூ.1295.00 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழஙகப்பட்டது.

- தற்போது நாள் ஒன்றுக்கு கீழ் குறிப்பிட்டுள்ள திட்டங்கள் மூலமாக 10.10 எம்எல்டி குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டு, நபர் ஒருவருக்கு 87 எல்பிசிடி குடிநீர் வழங்கப்படுகிறது. குடிநீர் விநியோகம் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை சுழற்சி முறையில் வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | வேலுார் கூட்டு குடிநீர் திட்டம் | 6.00 எம்எல்டி |
| 2. | சாரங்கால் நீரேற்று நிலையம் | 0.00 எம்எல்டி |
| 3. | நரியம்பட்டு நீரேற்று நிலையம் | 0.00 எம்எல்டி |
| 4. | ஆணைமடுகு நீரேற்று நிலையம் | 0.00 எம்எல்டி |
| 5. | வண்ணான்துறை நீரேற்று நிலையம் | 0.00 எம்எல்டி |
| 6. | 10 லாரிகள் மூலம் 100 நடைகள்/ நாள் ஒன்றிற்கு | 0.60 எம்எல்டி |
| 7. | மினிபவர் பம்பு மற்றும் கைப்பம்பு 490 எண்ணிக்கை | 1.500 எம்எல்டி |
| 8. | திறந்தவெளி கிணறுகள் 20 எண்ணிக்கை | 2.000 எம்எல்டி |
| | மொத்தம் | 10.10 எம்எல்டி |

ஆணையாளர்
ஆம்பூர் நகராட்சி,

## வேலூர் மண்டலம்

## ஆம்பூர் நகராட்சி

## கூடுதல் அலுவலக கட்டிடம்

- இந்நகராட்சி 2008 ஆம் ஆண்டு முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. நகராட்சியின் மொத்த பரப்பளவு 17.97 ச.கி.மீட்டர் ஆகும். நகரின் மக்கள் தொகை 2011ம் வருடம் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 113856 ஆகும். நகராட்சியில் 36 வார்டுகள் உள்ளன.

- இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் பொதுப்பிரிவு, வருவாய்பிரிவு, பொறியியல் பிரிவு, குடிநீர்பிரிவு, நகரமைப்புபிரிவு, கணினிபிரிவு, நகரளவை பிரிவு, பொதுசுகாதாரப்பிரிவு, ஆகிய பிரிவு அலுவலகங்கள் நகராட்சி வளாகத்தில் அங்கும் இங்குமாக உள்ளதால் பொதுமக்கள் மற்றும் வயதானவர்கள் வந்து செல்ல மிகவும் சிரமப்படுகின்றனர்.

- மேலும் நகரின் வளர்ச்சிக்கு ஏற்ப தற்போது உள்ள கட்டிடங்களில் அலுவலகம் செயல்படுத்தவும், பணியாளர்களுக்கு போதிய இடவசதி இல்லாததால் உள்கட்டமைப்பு மற்றும் இயக்குதல் & பேணுதல் இடைவெளி நிரப்புதல் நிதி திட்டத்தின் கீழ் புதியதாக நகராட்சிக்கு கட்டிடம் கட்ட ரூ.70.00 இலட்சம் மற்றும் நகராட்சி பொது நிதியில் ரூ.15.00 இலட்சம் சேர்த்து மொத்தம் ரூ.85.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

- நகராட்சி அலுவலகத்தில் ஏற்கனவே உள்ள நகரமன்ற கூடத்தின் முதல் தளத்தில் கூடுதல் அலுவலகம் கட்டப்படும் இடத்தின் மொத்த பரப்பளவு 5910 ச.அடி ஆகும். பொது மக்கள் எளிதில் தெரிந்துக் கொள்ளும் வகையில் தரைதளத்தில் தகவல் மையம், நகர்மன்றத்தலைவர் அறை, ஆணையர் அறை, பொதுப்பிரிவு, கனிணி அறை, சுகாதார அலுவலர், பொது சுகாதாரப்பிரிவு, வருவாய்ப்பிரிவு, நகரமைப்பு பிரிவு, மற்றும் பொறியியல் பிரிவும் உள்ளது. மேற்படி

- பிரிவுகள் அமைந்துள்ள இடம் போதுமானதாக இல்லை. தற்போது கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள முதல் தளத்தில் நகர்மன்றக்கூடம், பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு மற்றும் பதிவேடுகள் பாதுகாப்பு அறையும் அமைக்க உத்தேசிக்கப்பட்டு உள்ளது.

- மேற்படி கூடுதல் கட்டிடம் கட்டுதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு மன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட்டு **30.03.2015**ம் தேதியன்று பணி உத்திரவு வழுங்கப்பட்டது. மேற்படி பணியானது **30.09.2015**ம் தேதிக்குள் முடிக்கப்படும்.

ஆணையாளர்,
ஆம்பூர் நகராட்சி.